[டாக்டர். மு. கருணாநிதி]

அணித் தலைவர் என்றும் தாமோதரன் அரும்பாக்கம் பகுதி திராவிடர் கழக இளைஞர் அணியைச் சேர்ந்தவர் என்றும் தெரிய வருகிறது. கைது செய்யப்பட்டவர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டு இருக்கிறது. அவர்கள் கொடுத்த புகாரின்மீது வழக்கு மாத்திரம் பதிவு செய்யப்பட்டு இருக்கிறது. மேலும் விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது. இந்தச் செய்தியைக் கேள்விப்பட்டவுடன், நான், திரு. குமரி அனந்தன் அவர்களோடு தொலைபேசி மூலமாகத் தொடர்பு கொள்ள முயன்றேன். அவர்கள் கிடைக்கவில்லை. அதன் பிறகு, ஏற்ற நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்பட்டதாக அறிந்து கொண்டேன். போலீசாரும் நான் சொல்வதற்கு முன்பே நடவடிக்கையில் ஈடுபட்டு அவர்களைக் கைது செய்து வழக்கைத் தொடர்ந்து இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள், புரட்சிக் கவிஞர் பாரதிதாசனுடைய விழா எடுக்கிற நேரத்தில், இப்படி அமையவேண்டியதில்லை. இதில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொஞ்சம் தீவிரமாக— இப்படிப்பட்ட ஒத்த கருத்தோடு ஒரு விழா எடுத்து, அந்தக் கருத்தோடு, நம்மோடு ஒன்றி இருக்கிற ஒரு கருத்தில் விழா எடுக்கிற நேரத்தில் இப்படிப்பட்ட நிலைகள் வரக்கூடாது.—அவர்கள் மீது தீவிர நடவடிக்கை எடுத்து, இப்படிப்பட்ட நிலைகளைத் தடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

3. விதி 111-இன் கீழ் துணை வினாக்களுக்கான விடைகளுக்குத் திருத்த அறிக்கை.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் ; தலைவர் அவர்களே, விவரமான அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : "111-வது விதியின் கீழ் அறிக்கை" என்றால் அவ்வறிக்கையை மாண்புமிகு அமைச்சர் படிக்க வேண்டும்.

10-10 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, 5-4-1990ஆம் நாளன்று உடுக்குறியிட்ட வினா 3432-இன் கீழ், உறுப்பினர் திரு. கோ. வீரையன் அவர்கள் எழுப்பிய துணைக் கேள்விகளுக்கு, இந்த அவையிலே ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அளித்த பதிலுக்கான திருத்தத்தை, அவர் அமைச்சரவைக்கும் அவைக்கும் புதியவர் என்ற காரணத்தினால் அவர் சார்பில் நான் படிக்கின்றேன்.

3. விதி 111-இன் கீழ் துணை வினாக்களுக்கான விடைகளுக்குத் திருத்த அறிக்கை.

[டாக்டர். மு. கருணாநிதி]

அதில் சொல்லப்பட்ட பதில்: 'மாண்புமிகு தலைவர் அவர்களே, வரும் நிதியாண்டில் 100 மாணவ மாணவியர் விடுதிகள் ஆரம்பிக்க அரசு நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறது' என்று சொல்லப்பட்டிருக்கிறது.

திருத்தப்பட்ட பதில்: 'மாண்புமிகு தலைவர் அவர்களே, வரும் நிதியாண்டில் மாணவ மாணவியர் விடுதிகள் கட்டுவதற்கு ரூ. 300 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது' என்பதாக இருக்க வேண்டும்.

உறுப்பினர் வீரையன் அவர்களின் இரண்டாவது துணைக் கேள்விக்கு அளித்த பதிலில் திருத்தப்பட வேண்டிய பகுதி—

சொல்லப்பட்ட பதில்: 'மாண்புமிகு தலைவர் அவர்களே, மாணவ மாணவியர்களின் விடுதிகளில் எண்ணிக்கை குறைந்தபட்சம் 50 விகிதாச்சாரத்தில் இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.'

திருத்தப்பட்ட பதில்: 'மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்' என்பதாக இருக்கவேண்டும்.

4. கவன ஈர்ப்பு.

(அ) கிருஷ்ணகிரி வட்டம், மரிக்கம்பள்ளியிலுள்ள கெம்பிளாஸ்ட் தொழிற்சாலைக் கழிவுநீர் தென்பெண்ணை ஆற்றில் கலப்பதால் ஏற்பட்டுள்ள பாதிப்பு.

டாக்டர் க. காஞ்சனா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கிருஷ்ணகிரி வட்டம், மரிக்கம்பள்ளியில் உள்ள கெம்பிளாஸ்ட் தொழிற்சாலையின் கழிவுநீர் தென்பெண்ணை ஆற்றுநீரில் கலப்பதால் அப்பகுதி மக்கள் பாதிப்பு குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட அறிக்கையை அவைமுன் வைக்கிறேன்: